**செ. கு. எண்**: 254 **நாள்**: 12.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - **12.12.2011**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், மேய்க்கல்நாயக்கன்பட்டி கிராமத்திற்கு அருகில் **11.12.2011** அன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து சேலம் நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பேருந்தின் மீது, நாமக்கல்லிருந்து திருச்சிராப்பள்ளி நோக்கி வந்து கொண்டிருந்த லாரி மோதியதில், பேருந்தில் பயணம் செய்த நாமக்கல் மாவட்டம், ஏலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமரேசன் என்பவரின் மகன் தனசேகரன், திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், நாகையாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டியன் என்பவரின் மனைவி கன்னியம்மாள் மற்றும் அவரின் பேரக் குழந்தை ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த துயரச் சம்பவத்தில் ஒன்பது பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில்

சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், நாமக்கல் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**